உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 5 May 1943 No. 5

விஷய சூசிகை. பக்கம்

வைத்தியச்செய்திகள் 1
வைத்தியக்குறிப்புகள் 1
யோகரத்ஞகரம் (பண்டிட் நாராயணய்யங்கார்) 1–4
பலவகை ௸ 81–84
ஜ்வாவாக்யம் (மருக்கூர் Dr. K. வைகோடி அவர்கள்)
ரஸமும் அதன் உபயோகமும் (மதுரை Dr(S வெள்ளியக்கோனார் அவர்கள்) 4–6
ஹிருதயம் (பத்திராதிபர்)
அகங்காரகம் அல்லது திமிர் (கரூர் வைத்திய வாசஸ்பதி பண்டிட் P. S. ராமசர்மா அவர்கள்) 7–9
அனல்பஜல்பம் (மீமாம்ஸா சிரோமணி சென்னை கணபதி சாஸ்திரிகள்) 9–10

சந்தா விகிதம்.	விளம்பர விகிதம்.
வருஷ சந்தா:—	மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
உள் நாட்டுக்கு ரூ. 2	,, ,, ½-க்கு ரூ 4
வெளிநாட்டுக்கு ரூ. 3	,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher.
No 2, Police Station West Lane, Madura.

காபிரைட்] [விலை 0—3—0

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—43.

10 MAY 1943 MADRAS

வைத்தியச்செய்திகள்.

திருச்சி ஆயுர்வேதஸபையின் மாதாந்தக் கூட்டம் 21-4-43 வ. புதன்கிழமை மாலை 6-30-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது, ஸ்ரீமான் **P. G. கணபதி சாஸ்திரிகள்** தலைமை வஹித்தார்கள். ஸ்ரீ **N. கிருஷ்ணமூர்த்தி சர்மா** அவர்களால் **"ஆஹார நியமம்"** என்பதுபற்றி வடமொழியில் ஒரு வியாசம் எழுதிப்படிக்கப்பட்டது. மாலை 7-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது. ஸபா மெம்பர்களெல்லோரும் ப்ரஸன்னமாகியிருந்தார்கள்.

V. R. Subrahmania Aiyar,

ஸபாமந்த்ரீ.

மதுரை சுதேச வைத்திய சபா:—ஷை சபையின் ஆதரவில் 17—4—43வ. ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு மதுரை காக்காத்தோப்புத்தெரு சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் ராவ்பகதூர் R. நரசிம்மய்யங்கார் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் மதுரை டாக்டர் S. வன்னியக்கோனூர் அவர்கள் **ரஸமும்** அதன் உபயோகமும் என்பதைப் பற்றி உபன்யசித்தார்கள். 24-4-43 ஞாயிற்றுக்கிழமை பகல் 5-மணிக்கு ஷை பாடசாலையில் மதுரை டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பரும் பிரசாரகருமான சோழவந்தான் M. ராமகிருஷ்ணய்யர் அவர்கள் தலைமையில் சுக்துவான் இருமலும் அதன் சிகிச்சையும் என்பதைப் பற்றி சர்ச்சை நடந்தது. பல வைத்தியர்கள் உபன்யசித்தார்கள்.

காரியதரிசி.

வைத்தியக் குறிப்புகள்.

(1) **தாந்வந்தர கஷாயம்:**—பிரசித்தமான தாந்வந்தர தைலத்தின் கஷாயத்தை மாத்திரம் செய்து (அதாவது எண்ணை, கல்கம், முதலியன சேர்க்காமல்) உபயோகிக்கவேண்டும்.

(2) **சேங்கோட்டை:**—வாய்விளங்கம் சேர்ந்த முறைகளில் சேங்கொட்டை துர்குணம் செய்யாது. உதாஹரணமாக மஹாகாஸவம் எவ்வளவு காலம் உபயோகித்தாலும் துர்குணம் செய்யாது. வாய்விளங்கம் சேராத முறைகள் சிலருக்குக் கடுமையாக துர்குணம் செய்யும். உதாஹரணமாக அமிருதபல்லாதகி, இஷிவல்லாதிபோன்றவைகள் சிலருக்குத் துர்குணம் கொடுக்கின்றன.

பத்திராதிபர்.

யோகரத்நாகரம்

ஷை. பெயருள்ள ஓர் வடமொழி வைத்திய நூல் குமரி முதல் ஹிமயம் வரையில் ஸகல வைத்யர்களாலும் படிக்கப்பட்டு நித்யம் உபயோகத்திலும் முதன்மை பெற்றுள்ளது. இந்நூல் செய்தவருடைய பெயர் தெரியாவிட்டாலும் இதிலுள்ள முறைகள் பலராலும் போற்றப்பட்டுக் கையாளப்படுகின்றன. பங்காளத்தில் தத்காலம் பிரசாரத்திலுள்ள பைஷஜ்ய ரத்நாவளீ என்ற நூலில் காணப்படும் பல முறைகள் இந்நூலிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்நூலில் ஓர் வைத்தியனுக்கு முக்கியமாகத் தெரிய வேண்டிய வியாதிகாரணங்கள், வியாதி லக்ஷணங்கள், வியாதியின் பேதங்கள், வியாதிகளின் சாமான்ய சிகித்சை, வியாதிகளின் விசேஷ சிகித்சை, ஆகிய இவைகள் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அதோடு பஸ்ம சிந்தூரங்கள் செய்யும் முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. பைஷஜ்ய ரத்நாவளீ முதலிய நூல்களில் வியாதிகளின் சாமான்ய சிகித்சையும், விசேஷ சிகித்சையும், காணப்படுகின்றது. ஆகவே பைஷஜ்ய ரத்நாவளீ முதலியவைகளைக் காட்டிலும் இது விசேஷித்துப் பயனளிக்கக்கூடியது பற்றி இதைத் தமிழில் மொழிபெயர்க்க ஆரம்பித்துள்ளோம். தவிர பல நண்பர்களுடைய தூண்டுகோலும் இதற்கு ஓர் முக்கிய காரணமாகும். நாடிபரீக்ஷை முதலிய உபயுக்த விஷயங்களும் சுருக்கமாக இதில் விளக்கப்பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறுமிடத்து இந்நூல் வைத்தியர்களுக்கு ஓர் ஒப்புயர்வற்ற சாதனமென்றே சொல்லலாகும். பற்பல மாகாணங்களில் பற்பல பாஷைகளில் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நமது தமிழ் நாட்டில் தமிழ் பாஷையில் இது மொழிபெயர்க்கப்படவில்லை. வடமொழி தெரியாத தமிழ் மக்களுக்கு இது போன்ற பல நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டியது மிக ஆவசியமாகும். இக்குறை வெகுகாலமாக கவனிக்கப்படாமலேயிருந்தது. இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாகம் பாகமாக சந்திரிகையில் வெளியிட நினைத்துள்ளோம். இம்மொழி பெயர்ப்பில் சில கடினமான இடங்களில் குறிப்பு என்று நமது அனுபவங்கள் சேர்க்கப்படும்.

பண்டிட் நாராயண அய்யங்கார்,

கெ. 2, போலீஸ் ஸ்டேஷன் [illegible]

யோக ரத்நாகரம்.

(பொது விஷயங்கள்)

நிர்விக்னமாக நூல் முடிவுபெறவும் மங்களத்தையும் கருதி பிரம்மா, சிவன், விஷ்ணு, என்ற திரிமூர்த்திகளையும் அவர்கள் பத்தினிகளையும், அவர் குமாரர்களையும் வணங்கி, பிறகு நமது ஆசார்யர்களையும் வணங்கி யோக ரத்நாகரம் என்ற நூலை எழுதுகிறேன். சிரமும் சிலவும் மிகுந்த யாகாதிகள் இன்றியே அடியிற் கண்ட மூன்று பேர்களும் ஸ்வர்கலோகத்தில் சுகம் பெறுமென்றனர். அன்னமிடுபவர், தாகத்திற்குக் குடிநீர் அளிப்பவர், (அதாவது குளம், தடாகம், நிர்மாணம் செய்தல், தண்ணீர்ப்பந்தல் தர்மம்செய்தல்) நோயாளிகளுக்குச் சிகித்சை செய்பவர், ஆகிய இவர்களே முன் சொல்லிய மூன்று பேர்களாவர். ரோகங்கள் என்ற சேற்றுக் கிணரில் முழுகிப்போன நோயாளியைக் கைதூக்கி விடுபவர் எல்லா தர்மங்களையும் செய்தவராவர். அவர் ஸகல மரியாதைகளுக்கும் பாத்திரராவர். மங்களம் விரும்புபவர் பிரதிதினம் விடியற்காலையில் (படுக்கையை விட்டெழுந்தவுடன்) வைத்யர், புரோகிதர், மந்திரி, ஜோதிஷர், என்ற இந்நான்கு பேர்கள் முகத்தில் விழிக்கவேண்டும். ஜோதிஷர்களை வெறுப்பவன் ஐசுவரியத்தை இழப்பான். வைத்தியரை வெறுப்பவன் ஆயுளை இழப்பான். பிராம்மவித்துக்களை வெறுப்பவன் ஐசுவரியத்தையும் ஆயுளையும் இழப்பான். ஜோதிடம், வியவஹாரம், பிராயச்சித்தம், சிகித்சை, இவைகளை சாஸ்திர மூலமின்றி சொன்னால் பிரம்மஹத்தி பாபத்திற்குள்ளாவார். (குறிப்பு:—ஜாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்லுதலும், பரிஹாரம் சொல்லுதலும் ஜோதிஷமாகும், விவாதங்களில் தீர்ப்புசொல்லுதல் வியவஹாரமாகும். பாபங்களுக்குப் பரிஹாரம் சொல்லுதல் பிராயச்சித்தமாகும்.) சிலவற்றில் தர்மமும், சிலவற்றில் ஸ்நேகமும், சிலவற்றில் தனமும், சிலவற்றில் புகழும், சிலவற்றில் பயிற்சியும் கிடைக்கிறது. ஆகவே சிகித்சை வியர்த்தமாவதில்லை. ஜன்மாந்தரத்தில் செய்த பாபம் வியாதிரூபமாகப் பிடிக்கின்றது, மருந்துகள், தானங்கள், மந்திரஜபங்கள், சாந்திஹோமங்கள்·

பொது விஷயங்கள்.

தேவார்ச்சனை, ஆகிய இவைகளால் நோய்கள் சாந்தியடைகின்றன. வைத்யன் செய்யக்கூடியது என்னவென்றால். வியாதிகளை உள்ளபடி கண்டுபிடித்தல், வேதனையைத் தணித்தல். ஆகிய இவைகளையன்றி நோயாளிக்கு ஆயுளைக் கொடுக்க முடியாது. மனிதர்கள் சரீரபலத்திற்கு அக்னி சக்தி இன்றியமையாததாகும். அதுபோல் வாழ்நாள் விருத்திக்கு சுக்லம் இன்றியமையாத சாதனமாகும். ஆகவே அக்னி பலத்தையும் சுக்ல பலத்தையும் விசேஷித்து ரக்ஷிக்கவேண்டும். ஆரம்பத்திலேயே நோய்களை விலக்க யத்தனம் செய்யவேண்டும். வியாதி அல்பமாயிருப்பதுபற்றி ஆலசியம் செய்யக்கூடாது. நோய் அல்பமாக இருந்தபோதிலும் நெருப்பு, விஷம், ஆயுதம், இவைகளைப்போல் மிகவும் கெடுதி விளைவிக்கும். வியாதி பூர்ணமாகப் பரிஹரிக்கப்படவேண்டும். அதில் கொஞ்சம் கூட மீதி வைத்திருக்கக்கூடாது. நெருப்பில் பெரும் பாகத்தை அவித்து விட்டோமென்று நினைத்துச் சிறுகனலை மீதி வைத்தால் அது க்ரமமாக வளர்ந்து விடுகிறது. அதுபோலவே வியாதி நடமாட்டத்திற்கு ஏற்றமார்க்கம்போல நின்றுள்ள சரீரத்தில் ஸ்வல்பமாகவிருந்தபோதிலும் வியாதி முற்றிவிட ஹேதுவாகும். நெஞ்சுக்குழியில் உயிர் துடிக்கும்வரையிலும் நோயாளி பிழைக்கமாட்டானென்று சிகித்சையைக் கைவிடலாகாது. நல்வேளையை மின்னிட்டு அந்நிலைமையிலும் நோயாளி பிழைப்பதுண்டு. நோயை சாஸ்திரப்படி நிர்ணயித்து சாஸ்திரப்படி சிகித்சை செய்தும் பலிக்காவிட்டால் அந்நோயைக் கர்மநோய் எனலாகும். நற்காரியங்களாலும் சிகித்சைகளாலும் சுகமடையும் நோய்கள் திரிதோஷங்களாலும் ஜன்மாந்தர கர்மங்களாலும் உண்டானவையாகும். சிகித்சையால் நிவர்த்தியாகும் ரோகங்கள் திரிதோஷஜங்களாகும். ஆயுளுள்ள நோயாளிக்குத்தான் மருந்து, மங்களகாரியம், மந்திரம், மற்றும் பல நற்காரியங்கள் பலனளிக்கும். ஆயுர் பலமில்லாத நோயாளிகளுக்கு இவை பயன்படா. உலகத்தில் காணும் நோய்கள் அனைவற்றிற்கும் பெயர் கொடுக்கமுடியாது. ஆகவே புதிதாகக் காணும் ஓர் நோயின் பெயர் தெரியாததற்காக வைத்தியர் லஜ்ஜை யடையவேண்டியதில்லை. உலகத்தில் புதிதாக எந்த வியாதி தோன்றிய போதிலும் அது திரிதோஷப் பிரகோபத்தாலேயே தோன்றவேண்டும். ஆகவே நால்

களில் காணப்படாத புதிய நோய்களையும் திரிதோஷலக்ஷணங்களைக் கொண்டு தோஷ நிச்சயம்செய்து அதற்குத்தக்கபடி சிகித்சைசெய்யவேண்டும். மூர்க்கன், திருடன், மிலேச்சன், பிரம்மஹத்தி செய்தவன், மீன்பிடிப்பவன், தாவேஷி, வஞ்சகன், கிராமத்ரோஹி மாமிசம் விற்பவன், ஆகிய இவர்களுக்கு வைத்தியம் செய்யக் கூடாது. இவர்களுக்கு வைத்தியம் செய்வது பாபமாகும். தர்சனம், ஸ்பர்சம், பிரச்னம், இவைகளால் நோயாளியைப் பரீக்ஷிக்க வேண்டும். நிதானம், பூர்வரூபம், லக்ஷணம், உபசயம், ஸம்பிராப்தி ஆகிய இந்த ஐந்து உபாயங்களால் ரோகத்தைநிர்ணயிக்கவேண்டும்.

நான்கு பாதங்கள்:—சிகித்சைக்கு நான்கு பாதங்கள் இருக்கின்றன. அவையாவன:—(1) வைத்தியன் (2) மருந்து (3) நோயாளியைக் கவனிப்பவன் (4) நோயாளி, ஆகியவை, இந்நான்கில் தனித்தனி ஒவ்வொன்றுக்கும் நான்கு பாதங்கள் உள. அவையாவன (1) வைத்தியனுடைய நான்கு பாதங்களாவன—வைத்தியனும், நல்ல பரம்பரையில் பயிற்சிபெற்றவனும், அநுபவம் அடைந்தவனும், பரிசுத்தனும், ஆக இருத்தல் வேண்டும். (2) மருந்தின் நான்கு பாதங்களாவன—பல கல்பனைகளும், பல குணங்களும், மனம் ருசி பொருந்தியும், ஏற்றதாயும், இருத்தல். (3) நோயாளியைக் கவனிப்பவனுடைய நான்கு பாதங்களாவன—நோயாளியிடத்தில் அன்புள்ளவனும், பரிசுத்தனும், சமர்த்தனும், புத்திசாலியும் ஆக, இருத்தல் (4) நோயாளியின் நான்கு பாதங்களாவன—தியனியவானும், வைத்தியன் சொற்படி நடப்பவனும், சரீர நிலைமையை நன்கு விவரிப்பவனும், மனோதைரியமுள்ளவனும் ஆக இருத்தல்.

தூதபரீக்ஷை:—(குறிப்பு—வைத்தியனை அழைக்கவரும் மனிதனை யொட்டிய சகுன பரீக்ஷையால் நோய் குணமாகும் அல்லது ஆகாது என்று தெரிந்துகொள்வதற்குத் தூதபரீக்ஷை எனப்பெயர்) வைத்யனை அழைக்கவந்த மனிதன் வந்தவுடன் சொல்லிய முதல் வாக்யத்தின் எழுத்துக்களை எண்ணி அத்தத்தொகையை மூன்றால் பெருக்கிவந்த தொகையை எட்டால் வகுத்து வந்த மீதி எண் இரட்டைப்படையாக இருந்தால் மரணமென்றும், ஒற்றைப்படையாக விருந்தால் சுகமென்றும் தெரிந்துகொள்ள வேண்டும். (குறிப்பு— அழைக்கவந்த மனிதன் „யார் ஐயா உள்ளே" என்று

ஜ்வரவாக்யம்.

(மதுக்கூர் Dr. K. ஷாரோடி)

விஷயங்களை வகுத்தறியும் திறமைபெற்ற இந்நூற்றாண்டில் கூட என்னை ஒழுங்குமுறையில் தெரிந்துகொள்ளவில்லையென்றே கூறவேண்டும். ஆயினும் எனது இன்மை ஏற்படின் நிரோகச்செய்கைகள் நடைபெறுகின்றன. அறிவின்மை விளங்குகிறது. பிறப்பு, இறப்புகளில் இத்தன்மைகளைக் கொடுப்பதால் என்னை மோகரூபமாய் அழைக்கிறார்கள். இது தமோகுணத்திற்குப் பொருந்தியதே. பொது மக்கள் என்னை கஷ்டாபமானமென்றும் அபசாரத்தினின்றும் வெளிப்பட்டவனாயும் வைத்திய உலகம் கால அர்த்த கர்மங்களின் வேற்றுமைகளினால் தோன்றியவனாயும் மற்றும் சிலர் காமக்ரோதாதி ஜன்யனென்றும் கருதுகிறார்கள். வெப்பக்குறிகளான ரத்த ஓட்டப்பெருக்கு முகத்தில் சிவப்பேற்றமை, இருதய துடிப்புகளின் கூடுதல், பெருமூச்சு முதலிய லக்ஷணங்களும் என் ரூபத்தில் காணப்படுவைகளாகையால் சிவ கோபமென்பது ஒற்றுமைப்படலாகும். இந்த ரூபம் (உஷ்ணம்) பித்த ஜன்யமாக (ஊஷ்மா பித்தாத்ருதே நாஸ்தி...) நிர்மாணித்த அனுஸாரணையான பரிஹாரத்தைக் கூறியுள்ளார்கள். சைவ கோபஜன்யமாய் கருதுவதால் பரிஹாரமாய் தைவ வழிபாடுகளைக் குறித்திருப்பதும் நியாயமாகும். காமக்ரோதாதி ஜன்யமுறையில் மானஸசிகிச்சை போதிக்கப்பட்டிருப்பதும் தவறல்ல. முற்காலத்து தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. தேவர்கள் பிரம்மன் விஷ்ணுக்களைப்பூஜித்துவந்தனர். அசுரர்கள் சிவசக்திகளின் பூஜையைத்தழுவிவந்தனர். சிவ சக்திகளுக்கோர யாகாதிகளில் பங்கில்லாததை (மற்ற தேவர்களைப்போல்) பார்த்த அசுரர்களுக்கு தேவர்களிடம் பொறாமை அதிகமாயிற்று. தத்தம் தேவதைகளில் பெருமை புகட்ட வர்தித்தனர். இத்தருணத்தில் தக்ஷப்ரஜாபதியாகத்தை ஆரம்பித்தார் பரமசிவனைப் பழிக்கலானார். கோபங்கொண்ட ருத்ரனின் பரிவாரங்களான வீரபத்திரன் மகாளி முதலியன யாகத்தைக் கெடுத்தன. இக்கோபரூபமான நான் அன்று முதல் எங்கும் பரவலானேன். வெவ்வேறு ஸைன்யத்தைப்போல் என்னிலும் வேற்று

மைகள் பலவுண்டு. பலாபலன்களும் தகுந்தபடியேயாகும் என்பதே என்து இரகஸ்யம். சண்டைக்காலத் துண்டான என்னைத் தங்களின் எதிரியாய் நினைக்கின்றனர். இந்நினைவை யொட்டிகிறுவில் என்னை சிவபரிவாரமுமாய் காண்கின்றனரும். (சுரஸ்திரிபாதஸ்திரிசிரா) இத்தோற்றத்திற்கு மனச்சம்பந்தம் அவச்யமிருக்கவேண்டியிருப்பதால் நான் மனதையும் பிடிப்பதாய் அவர்யம் ஒப்புக்கொண்டாகவேண்டும் எனது உற்பத்தி பேதங்களை உண்மையான முறையில் உங்களுக்குச் சொல்லிவிட்டு மித்தியாஹார விஹாரங்களினால் ஸ்வதந்திர பாதந்திர ரூபத்தில் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி தேகத்தில் பரவிவிடுவேன் என்பதைத் திரும்பவும் சொல்லிவிடுகிறேன் பூச்சிகளாய் என்னைக்கருதுவோரின் நினைவுகள் பூர்வங்களென்றே சொல்லுவேன். ஆதிமுதல் அனந்த நூல்களில் திரிதோஷ ஜன்யமென்று நிரூபிக்கப்பட்டுள்ளேன். இத்தோஷங்களே தேகத்தில் எனது தோற்றத்திற்கு முக்கிய காரணங்களாகையால் இதரப் பூச்சிப் புழுக்கள் மறைமுகமான காரணங்களாய் கூறப்படலாமல்லாது நேர்முகத்தில் சொல்லமுடியாது. தேகத்தில் என் ரூபத்தைக் காண்பிக்கும் காரணங்கள் இருவகை யாகின்றன. முதலாவது நிமித்தகாரணம் அதாவது வெவ்வேறு வகைகளில் கெடுதல்களையடைந்த திரிதோஷங்களினால் ஏற்படுவது. இரண்டாவது ஆகந்துகம் திடீரென்றுண்டாவது இது இருவகைப்படும் ஸ்வதந்திர ஜன்யம் ஸங்கிரம ஜன்யம் என்பனவாம். ஸுஸ்ருதாதிகள் விதேச்யாதிகள் முறைப்படியாகும். இது தோஷக் கெடுதல்களை யுண்டு பண்ணிப்பின்னர் வியாதிஸம்பக்கிளப்புகின்றன. திருஷ்டாந்தமாக "ஆகந்துர்ஹிவியதாபூர்வோ ... . பச்சாத்தோஷை ரனுபத்யதே ஆகந்துர்ஹி வியதா பூர்வம் ஸமுத்பன்னோ ஜகன்யம்.....என்றுமுள்ள அக்னிவேச வசனங்களைக் கவனிக்கவேண்டும். இதன் தாட்பமான பொருட்களைக் கவனிக்குங்கால் "ஆகந்துபிணிகள் வாதபித்த கபங்களைக் கெடுக்கின்றமையால் அதுகளின் வைஷம்யம் வியாதி நிலைமைக்குக் காரணமென்று காண்பித்திருப்பதோடு பிரத்யேகப் பிணிகளுக்கு தனித்தனிப்பூச்சிகள் காரணங்களென்றும் கொள்கை நம்புதல் தவறென்று சொல்லக்கூசவேண்டியதில்லை. ஏன் என்றால் ஒருவன் அகஸ்மாத் அதி குளிர் நீரில் ஸ்நானம் செய்ததும் நீரின்

குளிர்ச்சியினால் அவனுக்குத் தொண்டைக்கட்டு, ஜலதோஷம், இருமல் முதலியன வுண்டாயிற்று. இக்கெடுதல்கள் அவனுடைய ஜீவன் சக்திக்குறைவு ரோக க்ஷமதாக்குறைவுகள் ஸ்நானஸமயத்தில் ஏற்பட்டமூலம் நீர் என்று ஸம்பந்தப்பட்ட பூச்சி உள்நுழைந்து உண்டானவைகள் என்று எவ்விதம் சொல்லக்கூடும். (பொதுவாக வெட்டி இரு குறிப்புகளேயே பூச்சிப்பிரவேச வசதிகளாய் கூறப்படுகின்றன) ஆகையால் குளிர்ந்த நீர் பட்டதும் தேகத்தில் உஷ்ணக்குறைவு ஏற்பட்டு கபவாதங்களின் செய்கைகள் மேல்பட்டன வென்று சொல்லவேண்டும். அவ்விதம் சொல்லின் அநாதி அல்லது ஆதி நூல்களில் பிரஸ்தாபித்திருப்பதுபோல் திரிதாதுக்களின் ஆதாரம் பிணிகளுக்கு சொல்லப்பட்டவாயிற்றல்லவா? மேனாட்டினர் மதப்படி சரீரத்தின் ஜீவதியசக்தி (Vitality)க்குறை ஏற்படுமாகில் தான் வெளியுலகத்தில் உள்ளே நுழையும் பூச்சிகள் பிணிகளுக்கிடப்ப வல்லமை பெற்றுள்ளன வென்றுள்ளார்கள். ஆனால் ஆரியமதப்படி இச்சிறு ஜீவாதிக்குன்றங்களை ரோக காரணங்களாகின்றன என்போது ஆதிகாரணத்தை விட்டு மத்தியிலுள்ளதைக் காரணமாய் கொள்வார்களா. "ஆங்கிலவைத்தியர்களின் லெக்சரரின் அபிப்பிராயப்படி "Immunity has not yet been satisfactorily explained (ரோக க்ஷமதை விஷயம் இன்னும் திருப்திகரமாக நிர்த்தாரணம் செய்யப்படவில்லை) The modern theories teach that immunity depends upon phogocylies or the distruction of the micro-parasites and their toxin by phagraytes or upon the chemical action of the body juices (இக்காலத்து சித்தாந்தப்படி தேகத்தின் ரோக க்ஷமதை சம்பந்தப்பட்டவையன க்ரியாத்வாரரோ கோத்பாதகக் கிருமிகளைத் தாக்கிறது)" யோசித்துப் பார்ப்பின் ரோக க்ஷமதை ஜீவனீய சக்திகளைப்பொறுத்த அறிவு எவ்வளவில் பெற்றிருக்கின்றது விளக்குமல்லவா. நம் நாட்டு வழக்கப்படி "ஸமதோஷ: ஸமாக்னிச்ச ஸமதாது மலக்ரிய: ப்ரஸன்னாத்மேந்த்ரியமனா: ஸ்வஸ்த இத்யபிதீயதே என்றும், "தோஷஸாம்யம் ஆரோகதா" என்றுமுள்ள உபதேசங்களை யோசிப்பின் ஜீவனீய சக்திக்குறைவு, ரோக க்ஷமதையின் குறைவு இவைகள் தோஷசாம்யக் குறைவினால் உண்டாகின்றன வென்பதால்

இத்தன்மைகளில் ஏற்படும் பிரத்யேகப் பூச்சிகளின் சரீரப்ரவேசத்தினால் எங்கள் ஸஜாதீயங்கள் ஏற்படுகின்றன வென்பது யுக்திக்கோ அனுபவத்திற்கோ ஒவ்வாது. திருஷ்டாந்தமாக விஷமஜ்வரத்தில் Plasmodium malerial என்றும் ஜீடாணுவின் காரணத்வம் கற்புத்துள்ளார்கள். ஆனால் இச்சுரப்பீடிதர்களில் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதங்களான கொள்கைகள் காண்பிக்கப்பட்டுள்ளன. அதாவது சிலருக்கு தலைவலி, மயக்கம், சிலருக்கு வாந்திபேதி, சிலருக்கு நடுக்கம், வாக்ஷி, சிலருக்கு அதிக தூக்கம், மயக்கம் முதலியவைகள் காண்கின்றன. இச்சுரத்திற்கு இப்பூச்சியே காரணமாக விருப்பின் வேற்றுமைக் குறிப்புகள் உண்டாகக் காரணம் யாது. பிணி அனுஜன்யமாயிருப்பினும் தோஷங்களின் சம்பந்தமிருப்பதாய் கூறவேண்டும். மேலும் இப்பிணியில் கொயினாவை ஔஷதமாகப்ரயோகம் செய்தவர் சிலருக்கு "Cinchonism" என்றும் விஷத்தன்மை ஏற்படுவதாயும் மற்று சிலருக்கு ஏற்படாமலும் தெரிந்திருப்பதால் இவ்விடத்தில் சரீரத்தின் வாதாதிப்ரகிருதிகளைக் கூறவேண்டியது அவசியமாகும். ஆகையால் சரீர உற்பத்தியும் எங்கள் ஸஜாதீயங்களின் தோற்றமும் விலக்குதல்களும் மற்று யாவும் திரிதோஷங்களின் பொருந்தென்றே சொல்லிக்கொள்கிறேன். மேலும் என் வாலாறுகளையும் விஷயங்களையும் வளர்க்கவெண்ணாது முடித்துக்கொள்கிறேன்.

ரஸமும் அதன் உபயோகமும்.

(மதுரை டாக்டர் S. வன்னியக்கோனார் அவர்கள் நாளது எப்பிரல்மீ 17உ சுதேச வைத்திய சபையின் ஆதரவில் செய்த உன்யாசத்தின் சுருக்கம்.)

ரஸமும் அதன் உபயோகமும் என்ற விஷயத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறுகின்றோம். போகர் ஏழாயிரத்தில் "பாலியே ரோமபுரி கடலுக்குக்கிழக்கே" என்றும் "காணவே பத்திலொன்று சீனதேசத்திற்கு" என்னும் வசனங்களைக் கவனித்தால் ரோமபுரியிலும் சீன தேசத்திலும் ரஸகனிகள் இருந்ததென்பது நம்முன்

ஞோர்கள் அறிந்திருப்பதாகப் புலப்படுகின்றது. ரோமபுரி யென்பது தற்காலம் ரோம் என்ற பெயருடன் விளங்கும் இடாலி தேசத்தின் தலைநகராகும். தற்காலமும் இடாலிதேசத்திலிருந்து ரஸ வருவதாகச் சொல்லப்படுகின்றது. இந்த ரஸம் என்ற வஸ்து இயற்கைச்சரக்காகும். உலோகங்களுடன் கலந்துமிருக்கும். இதைத் தனிப்படுத்தி நமது கடைகளில் விற்கின்றனர். இதை வாங்கி நாம் சுத்திசெய்து கொள்ளவேண்டும். ரஸத்திலுள்ள ஸப்த கஞ்சுகங்கள் என்ற தோஷங்கள் நிவர்த்தியாக அதற்குச் சில ஸம்ஸ்காரங்கள் நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த ஸம்ஸ்காரங்களில் வைத்தியத்திற்கு மிக்க உபயோகமானது எட்டு ஆகும். இந்த அஷ்ட ஸம்ஸ்காரங்களைச் செய்வது வைத்தியனுடைய முக்கிய கடமையாகும். உலாந்துலிங்கத்திலிருந்து ரஸத்தை எடுத்துக்கொள்ளுவது சுலபமான முறையாகும். ஹாஷிராபாத் என்ற நகரத்தில் உயர்ந்த திருஸலிங்கம் தயார் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த லிங்கத்தைச் சுத்திசெய்து காயவைத்துப் பிறகு அயத்துடன் சேர்த்துப் பொடித்து ஓர் சட்டியில் போட்டுமேல்சட்டி கவிழ்த்து மூடி வாய்க்குச்சீலைமண் செய்து காயவைத்துப் பிறகு அடுப்பேற்றி 12 மணி எரித்து ஆறவிட்டு மேல்சட்டியில் பதங்கித்திருப்பதை எடுத்துக்கொண்டால் அது சுத்தமான ரஸமாகும். ரஸத்திற்குக் கந்தகஜாரணமும் முக்கியம். வாதத்திற்குக் கல்பமுறைக்கும் அவசியமான மற்ற பத்து ஸம்ஸ்காரங்கள் நமக்கு மிகவும் அசாத்தியமானவை. ரஸத்தைப் பஸ்மம் செய்வதென்பது இக்காலத்தில் நம் போன்றவர்களுக்குச் சாத்தியமில்லை. எரிப்பு முறைகளால் பஸ்மம்செய்வதுதான் சாத்தியமானது. ரஸத்தைச்சில சரக்குகளுடன் சேர்த்து ஓர் சட்டியில் போட்டு மேல் சட்டிமூடி எரித்தால் மேல் சட்டியில் பதங்கிக்கும் இம்முறையாக பஸ்மம் செய்வது ஓர் வழி, அல்லது காசிக்குப்பியில் போட்டு வாலுகாயந்திரத்தில் எரித்து எடுப்பது இரண்டாவது வழி. இந்த இரண்டு வழிகளால்தான் ரஸ பஸ்மம் செய்வது சாத்தியம். இவ்விதம் தயாரித்த ரஸபஸ்மத்தைத் தகுந்த அனுபானங்களுடன் உபயோகிக்கப்பல நோய்கள் நிவர்த்தியாகின்றன. இந்த இரண்டு வழிகளால் தயாரிக்கப்படும் ரஸ பஸ்மங்களில் சில துர்குணமும் செய்வதுண்டு. சில முறைகள் சற்றும்

தார் குணம் கொடுப்பதில்லை. முக்யமாக கந்தகம் சேர்த்துத் தயாரிக்கப்படும் முறைகளில் தூர்குணம் சற்றும் இருப்பதில்லை. கந்தகம் சேராத முறைகளில் சில தூர்குணம் கொடுக்கின்றன; தூர்குணம் இல்லாத முறைகளைக் கையாளுவது வைத்தியன் கடமை. மேக ரோய்கள், பரங்கிரோகம், இவைகளுக்கு இது ஒப்புயர்வற்றதாகும்.

ஹிருதயம்.

(பத்திராதிபர்)

முன் சந்திரிகையில் நமது 'மதத்திற்குச் சாதகமான' பிரமாணங்களை வெளியிட்டோம். இப்பொழுது நமது மதத்திற்கு விருத்தமான வசனங்களை வெளியிடுகிறோம். அச்சாகியுள்ள ஆயுர்வேத நூல்களில் மூலவசனங்களில் ஒன்றாவது நமது மதத்திற்கு விருத்தமாகக் காணப்படவில்லை. ஆனால் வியாக்யானங்களில் இரண்டு வசனங்கள் மாத்திரம் விருத்தங்களாக இருக்கின்றன. அவையாவன:-(1) மாதவநிதானம், விக்ரதிநிதானம் 16வது சுலோக வியாக்யானம் "க்லோம விருக்காதூர்த்வம் பிபாஸாஸ்தானம்" என்பது. மூத்திரக்குண்டிக்காய்க்கு மேலுள்ள அவயவம் க்லோம என்பது வசனத்தின் பொருள். இது நமக்கு விருத்தமே. ஆனால் இந்த வசனம் பரமதத்திற்குச் சற்றும் சாதகமாகாது. ஏனெனில் பரமதத்தில் க்லோமமென்பது கிரஹணியாகும். இக்கிரஹணியானது மூத்திரக்குண்டிக்காய்க்கு மேலே இருப்பதாகப் பிரத்யக்ஷ சாரீர மறிந்தவர்கள் ஒப்பமாட்டார்கள். தவிர கிரஹணியைப் பொருளாக நினைத்திருந்தால் வியாக்யாதா சுலபமாக கிரஹணி என்கிற பிரதிபதம் எழுதியிருக்கலாம். பிரசித்தமான பிரதிபதத்தைவிட்டு அப்பிரசித்தமான "திலகம்" என்ற பதத்தைக்கொண்டு விளக்க வேண்டியதில்லை. இரண்டு விருக்கங்களுக்கு நடுவிலும் விசேஷித்து வலது விருக்கத்துடன் சம்பந்தித்தும் இருப்பது கிரஹணியாகும். இங்கு "ஊர்த்வம்" என்ற பதம் கொஞ்சமும் பொருந்தாது. (2) சுசுருதம் விக்ரதிநிதானம் 10-வது அத்யாயம் 18-வது சுலோக வியாக்யானத்தில் "க்லோம கால கண்டாததஸ்திதம் தக்ஷிண பார்சுவஸ்தம் திலகம் பிரசித்தம்" என்ற வசனம் இரண்டாவதாகும்.

இந்த வசனம் நமது மதத்திற்கு மிகவும் விருத்தமாகும். ஆனால் இங்கு ஒன்று கவனிக்கவேண்டும். ச்லோமாவுக்குப் பொருள் சொல்லும்பொழுது திலகம் என்ற பிரதிபதத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. நூல்களில் எங்கும் ச்லோமாவுக்குப் பொருள் சொல்லும்பொழுது கிஹணி என்று பிரதிபதம் சொல்லப்படவில்லை. ஆகையால் ச்லோமாவை கிஹணியென இவ்வசனம் காட்டாது. ஆகவே இவ்வசனம் பரமதத்திற்கு அநுகூலமாகாது. தவிர வித்ரதிக்கு ஸ்தானமாகச் சொல்லப்படும் ச்லோம என்பது மாமிசபிண்டமாக இருக்கவேண்டும். மாமிசமில்லாத இடத்தில் வித்ரதி என்ற கட்டி உண்டாகாது. மாதவநிதானம், வித்ரதிநிதானம் 12-வது சுலோக வியாக்யானத்தில் "பஸ்திமுகே இதி பஸ்திமுக ஏவ, வித்ரத்யாதாரஸ்ய மாம்ஸாதி ஸம்பவாத். நபஸ்தெள. தஸ்ய தத்பாக்வாத்]" இதன் பொருள்—"பஸ்தி முகத்தில் தான் வித்ரதி என்ற கட்டி உண்டாகும். பஸ்தியில் அது உண்டாகாது. ஏனெனில் வித்ரதிக்கட்டிக்கு ஆதாரமான மாமிசம் முதலியவைகளின் சம்பந்தம் பஸ்தி முகத்திற்கு இருக்கிறதேயன்றி பஸ்தியில் கிடையாது." அதுபோல ச்லோம என்பது கிஹணிக்குமாயானால் அதில் மாமிசாதிகள் இல்லாததால் வித்ரதிக்கட்டியுண்டாக வழியில்லை. "வித்ரதிர்மாம்ஸ சோணிதே," என்ற (ஸுச்ருதநிதானம் அத்யாயம் பத்து சுலோகம் 32) வசனத்தையும் கவனிக்கவும்.

அகங்காரம் அல்லது திமிர்.

(வைத்ய வாசஸ்பதி கரூர் பண்டிட் P. S. ராமசர்மா)

திருச்சியில் வெளியாகும் Mtscellany என்ற ஆங்கில வைத்திய பத்திரிகையின் 1913 ஏப்ரல் சஞ்சிகையில் பத்திராசிரியரால் ஓர் தலையங்கம் எழுதப்பட்டு வெளிவந்திருக்கிறது. அத்தலையங்கம் குரோத உணர்ச்சியை வெளியிடுவதாகவும் ஒரு தலைப்பக்ஷமாகவும் அமைந்திருக்கிறதென வருத்தத்துடன் நாம் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இனிமேல் சுதேசவைத்தியர்கள் கையாளமுடியாதபடி சர்க்கார் நிர்பந்தத்தை அதிகப்படுத்த வேண்டுமென்பது அதன் முதல் கோரிக்கை. அக்கோரிக்கைக்கு ஆசிரியரின் அறியாமையே

காரணமாகும். இந்தியாவில் பொது ஜனங்களில் பலர் அபினியை கள்குடிபோல உபயோகிக்கின்றனர். லைசென்சுபெற்ற கடைகளில் பொதுஜனங்களுக்கு விற்கப்படுகிறது. தன்னிஷ்டம்போல் பொது ஜனங்கள் உபயோகிக்கும் அபினியை சுதேசவைத்தியன் ரோகிகளுக்கு உசிதமான அளவில்கூட கொடுக்கக்கூடாதென சட்டமியற்றப்படவேண்டுமென விரும்புவதற்குக் காரணம் அசூயையா அல்லது அறியாமையா? சுமார் ஐம்பது மருந்துகளுக்குமேல் அபினிசேர்ந்துள்ள மருந்துகளாக வைத்திய நூல்களில் காணப்படுகின்றன. ஷை மருந்துகள் முழுவதும் சுதேசவைத்தியர்களால் பிரதிதினம் கையாளப்பட்டு வருகின்றன. இவைகளை தடுத்துவிட விரும்புவது நேர்மையாகுமா? அறிவீனர்கள் எல்லா முறைகளிலும் காணப்படுகின்றனர். ஆங்கில வைத்தியர்கள் அனைவருமே நேர்மையான முறையில் இதுபோன்றமருந்துகளை உபயோகிக்கின்றனர் என்று உறுதி சொல்ல முடியாது. சில வருஷங்களுக்குமுன் சென்னையில் ஓர் பிரதான ஆஸ்பத்திரியில் ஓர் டாக்டர் Chloral Hydrate என்ற மருந்தை அதிக அளவில் கொடுத்து நோயாளி இறந்துவிட்டதாக ஹிந்து பத்திரிகையில் வெளிவந்ததை யாரும் மறந்திருக்கமுடியாது. இவ்விதம் ஓர் ஆங்கில வைத்தியர் செய்துவிட்டதற்காக எல்லா ஆங்கிலவைத்தியர்களுக்கும் தடை விதிப்பது உசிதமாகுமா? சில வருஷங்களுக்குமுன் மதுரையில் பிரசித்திபெற்ற ஓர் ஆங்கில வைத்தியர் Tr. Iodine இஞ்சக்ஷன் கொடுத்ததில் ஓர் நோயாளி பல வருஷம் கஷ்டநோய்க்குள்ளானார். இதைக்கொண்டே மற்றவர்களுக்கும் தடை விதிக்க நினைப்பது பேதமையாகும். இஞ்சக்ஷன் என்பது சுதேசவைத்தியர்களுக்குப் புதிதல்ல "சூசிமுகாஸம்" என்ற மருந்தை ரக்தத்தில் சம்பந்தப்படுத்தி ரோக நிவர்த்தி செய்யும்படி சுதேசவைத்திய நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஜான்ஸி என்ற வடதேசத்து நகரத்தில் ஆயுர்வேத இன்ஜக்ஷன் மருந்துகள் தயாரிக்கப்பட்டுப்பல சுதேசவைத்தியர்களால் தற்காலம் கையாளப்பட்டு வருகிறது. இன்ஜக்ஷன் ஆங்கில வைத்தியர்களுக்கு ஏகபோக உரிமையாகி விடாது. அவரவர் கற்றுள்ள முறைப்படி அவரவர் வைத்தியம் செய்வதுதான் உசிதமென்பதைப் பூர்ணமாக ஒப்புக்கொள்ளுகிறோம். இந்த உபதேசம்

சுதேசவைத்தியர்களுக்கு மாத்திரம் செய்வதில் அருமைதான் காரணமாகும். திரிதோஷங்களை யறியாத ஆங்கில வைத்தியர்களில் பலர் திரிதோஷங்களையே அஸ்திவாரமாகக்கொண்டு சொல்லப்பட்டுள்ள சுதேச மருந்துகளைக் கையாளுவதை ஏன் பகிரங்கமாகக் கண்டிக்கவில்லை? காலம் சென்ற டாக்டர் நஞ்சுண்டராவ் டாக்டர் கோமன் முதலானவர்கள் வஸந்த குசுமாகரம் போன்ற பல மருந்துகளை வெளிப்படையாக உபயோகித்து வந்தது பலருக்கும் தெரியும் தற்காலம் உபயோகிக்கப்படுவதும் வெளிப்படை. ஆங்கில வைத்தியர்களுக்கு மாத்திரம் அந்த உரிமையை ஒப்புக்கொள்வது எவ்விதம் நியாயமாகும். கனோரியா போன்ற நோய்களை ஓர் அவிவேகி வைத்தியன் அதிகப்படுத்தி யிருக்கலாம். அந்த உதாரணத்தைக் கொண்டு சுதேச வைத்தியர்களைவரையும் தாக்கிப்பேசுவது அழகல்ல. இவ்வித உதாஹரணம் ஆங்கில வைத்தியர்களிலும் நூற்றுக்கணக்காகக் காட்ட முடியும். உண்மையில் கனோரியா போன்ற நோய்கள் சுதேச முறைகளால் குணப்படுவது பொது மக்களுக்குத் தெரியும்.

அனல்பஜல்பம்.

(மீமாம்ஸா சிரோமணி கணபதி சாஸ்திரிகள்)

சந்திரிகையில் ஹ்ருதயம் என்ற தலைப்பின்கீழ் வெளிவந்துள்ள ஆடார்ஷியான வியாசங்களை நான் படித்தேன். எனக்கு வைத்திய சாஸ்திரத்தில் பாண்டித்யம் கிடையாது. ஆனது பற்றி அந்த சர்ச்சையில் நான் இறங்க விரும்பவில்லை ஆனால் அவ்வியாசங்களில் வெளிவந்துள்ள மீமாம்ஸா விஷயங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஹ்ருதய பதத்தில் பொருளை விமர்சம் செய்வதில் மீமாம்ஸையின் உபயோகத்தைக் குறைத்துக் கூற யாரும் துணிவார்கள். அவிச்சின்ன பரம்பரையாக யாக்ஞிகர்கள் ஹ்ருதயாதிகளை அறிந்தும் அனுஷ்டித்தும் வருகின்றனர். "அதவக்ஷஸ:" என்ற இடத்தில் "வக்ஷஸ்" என்பது வல்லுத்வித்தயவாசியாக இராவிட்டால் "தக்லோம்ன:" என்றநிஷேதம் பிரசங்கமின்றிப்போகும் என்ற பக்ஷிராஜியர் மதம் சாஸ்திர சம்மதமாகும். ஹ்ருதயாதி 11 அவயவங்களும் ஏகோ ஒரு பதம்திவிதய வாசியாகியே இரவேண்டும். ஆகவே இங்கு பாரிசேஷாத் "வக்ஷஸ:" என்ற விதி வாக்யத்தில் அவயவத்வம் [illegible] நிஷேதம் உசிதமென்பது சரியே. "[illegible]" என்பது [illegible]

யை ஓர் வஸ்திரத்தில் கட்டித்தொங்கவிட்டால் அதிலிருந்து கசிந்து வரும் நீர்) சின்னப்படி எட்டு, சேர்த்து அதில் சதகுப்பை, அமுக்கரா, மஞ்சள், தேவதாரு, கடுகுரோகிணி, அரேணுகம், மருள்கிழங்கு, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம், கோரைக்கிழங்கு, அரத்தை, வகைக்குத்தோலா ஒன்று, இடித்துப் பொடிசெய்து கல்கமாகப் போட்டு தைலபதமாகக் காய்ச்சி வடித்து ஸ்நாநம் செய்துவர விஷமஜ்வரங்கள், அஸ்திகாங்கை, அபஸ்மாரம், பைத்தியம், அரிப்பு, தர்காற்றம் முதலியன தீரும்.

213. தன்வந்தரி குளிகை:—சுக்கு, கசிக்காய், ஜீரகம், நிலவேம்பு, வசம், முல்லிவேர், ஆசாளி, சுண்டைவேர், வால்மிளகு, ருத்திராக்ஷம், தேவதாரம், கர்ப்பூரம், சண்டிவெண்ணை, புழுகு, இவைகளைச் சமயிடை எடுத்து ஜீரகக்கஷாயத்திலும் பன்னீரிலும், அரைத்து நான்கு குன்றியிடை மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி பழுத்த பிலாஇலையின் கஷாயம் அல்லது சுண்டைவேர் ஜீரகம், கருஞ்ஜீரகம், காட்டு ஜீரகம், இவைகளின் கஷாயத்தின் அநுபானத்தில உள்ளுக்குக் கொடுக்க காசம், சுவாஸம், க்ஷயம், விக்கல், வாந்தி, இவைகளை நீக்கும்.

214. அசுவகந்தாதி தைலம்:—அமுக்கரா, கொடிவேலி, விலாமிச்சம்வேர், குருந்தொட்டி, கன்னூரி, வகைக்குத்தோலா 12 இடித்து சின்னப்படி 8 ஜலம்விட்டு மூன்றில் ஒன்றாக வற்றவைத்துக் கஷாயம் செய்து அதில் மணதக்காளி, முசுமுசுக்கை, வல்லாரை, புளியாரை, இவைகளின் ரஸம் பசும்பால் கஸித்தளி சின்னப்படி அரை சேர்த்து மிளகு, வால்மிளகு, கோஷ்டம், தேவதாரு, கருவாப்பட்டை, ஓமம், அதிமதுரம், வெட்டிவேர், வகைக்குத்தோலா முக்கால் இடித்துப் பொடிசெய்து அதில் போட்டு நல்லெண்ணை சின்னப்படி இரண்டு, கோரோசனம், குங்குமப்பூ, வகைக்கு அரைக்கால் தோலா சேர்த்து மெழுகு பதமாகக் காய்ச்சி வடிக்க அப்யங்கம் செய்துவர நேத்ரரோகங்கள் போம்.

215. அசுவகந்தாதி தைலம்:—அமுக்கரா, குருந்தொட்டி, பில்வவேர், பாதிரிவேர், கண்டங்கத்திரி[illegible] சிறு

நெரிஞ்சிவேர், பெருங்குருந்தொட்டி, வேப்பம்பட்டை, பெருவாகை வேர், சாரணத்திவேர், முதியார்கூந்தல், முன்னைவேர், வகைக்குத்தோலா 40, இடித்து அதில் சின்னப்படி 128 ஜலம் சேர்த்து 32 படியாக வற்றவைத்துக் கஷாயம்செய்து வடிகட்டி அதில் நல்லெண்ணை, தண்ணீர்விட்டான் ரஸம், வகைக்குச் சின்னப்படி எட்டு, பசும்பால் சின்னப்படி 32 சேர்த்து கோஷ்டம், ஏலம், சந்தனம், மருள்வேர், வசம்பு, சடாமாஞ்சி, இந்துப்பு, அமுக்கரா, குருந்தொட்டி, அரத்தை, சதகுப்பை, தேவதாரு, ஓரிலை, மூவிலை, மாஷபர்ணி, முத்கபர்ணீ, தகரவிதை, இவை வகைக்குத்தோலா எட்டு இடித்துப் பொடிசெய்து கல்கமாக அதில் போட்டு இளம் தீயிட்டு மெழுகு பதமாக வடித்து அப்யங்கம் செய்துவர வாதரோகங்கள் போம்.

216. அங்காரக தைலம்:—மருள்வேர், கொம்பரக்கு, மஞ்சள் மரமஞ்சள், மஞ்சிஷ்டி, பேய்க்கொம்மட்டிவேர், கண்டங்கத்திரி வேர், இந்துப்பு, கோஷ்டம், அரத்தை, சடாமாஞ்சி, தண்ணீர்விட்டான், வகைக்குத்தோலா $2\frac{5}{8}$ இடித்துப் பொடிசெய்து நல்லெண்ணை சின்னப்படி இரண்டு, கஞ்சி சின்னப்படி எட்டு இவைகளைச் சேர்த்து மெழுகுபதமாகக் காய்ச்சி தைலம் வடித்து லேபனம்செய்ய சாங்கை முதலிய ரோகங்கள் தீரும்.

217. பலகிருதம்:—திரிபலை, அதிமதுரம், கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், கடுகுரோகிணீ, வாய்விளங்கம், திப்பிலி, கோரைக் கிழங்கு, பேய்க்கொம்மட்டிவேர், கட்பலம், வசம்பு, மேதா, மகாமேதா, காகோலீ, க்ஷீரகாகோலீ, நன்னாரி, பாகாலி, ஞாழல், சதகுப்பை, பெருங்காயம், அரத்தை, வெள்ளைச்சந்தனம், செஞ்சந்தனம், ஜாதிப்பூ, மூங்கிலுப்பு, தாமரைக்கிழங்கு, ஜீனி, ஓமம், தந்திவேர், வகைக்குத்தோலா ஒன்று இடித்துப் பொடிசெய்து பசுநெய் சின்னப்படி இரண்டு, பசும்பால் சின்னப்படி எட்டு, சேர்த்து காட்டு எருவால் தீயிட்டு அதில் கிருதபதமாக வடித்துத் தினம் காலையில் ஒரு அவுன்சு சாப்பிட்டுவர கர்ப்பம் தரிக்கும்.

218. திரிபலாகிருதம்:—திரிபலை கஷாயம், ஆடாதொடை ரஸம், கீழ்க்காய்நெல்லி ரஸம், வெள்ளாட்டுப்பால், பசுநெய், வகைக்குச்

சின்னப்படி இரண்டு எடுத்து அதில் திரிபலை, திப்பிலி, திராக்ஷை. சந்தனம், இந்துப்பு, குருந்தொட்டி, காகோலி, க்ஷீரகாகோலி, மேதா, மிளகு, சுக்கு, சர்க்கரை. வெண்டாமரைக்கிழங்கு, தாமரைக் கிழங்கு, சாரணைத்திவேர், மஞ்சள், மரமஞ்சள், அதிமதுரம், வகைக் குத்தோலா ஒன்று பொடிசெய்துபோட்டு கிருதபாகமாகக் காய்ச்சி வடித்து தினம் காலையில் ஒரு அவுன்சுவீதம் சாப்பிட்டுவர அந்திக் கண், பகல் குருடு, கண்ணீர்வடிதல், படலம், திமிரம், முதலிய கண் நோய்கள் முழுவதும் தீரும். குறிப்பு:: திரிபலை வகைக்குத்தோலா 21 எடுத்து இடித்து ஜலம் சின்னப்படி 8 விட்டு இரண்டுபடியாக வற்றவைத்துக் கஷாயம் செய்துகொள்ளவும்.

219, கௌராத்யகிருதம்:—மஞ்சள், மரமஞ்சள், ஓரிலை, மருள் வேர், நன்னாரி, சந்தனம், செஞ்சந்தனம், சிந்தில், அதிமதுரம், பதுமகம், தாமரைப்பூ, கருநெய்தல், விலாமிச்சவேர், மேதா, திரிபலை, ஆல், அரசு, அத்தி, இச்சி, நறுவிலி, இவை வகைக்குத்தோலா ஒன்று இடித்துப் பொடிசெய்து அதில் நெய் சின்னப்படி இரண்டு, ஜலம் சின்னப்படி நான்கு சேர்த்து கிருதபதமாகக் காய்ச்சி வடித்து தினம் காலையில் ஒரு அவுன்சு சாப்பிட விஷம் நீங்கும்.

220, ஜாத்யாதிகிருதம்:—ஜாதிவேர், (சிலர் ஜாதிப்பூ என்பர்) வேப்பம்பட்டை, பேய்ப்புடல், மஞ்சள், மரமஞ்சள், கடுகுரோகிணி மஞ்சிஷ்டி, அதிமதுரம், வெள்ளை மெழுகு, புங்கம்பட்டை, விலாமிச்சவேர், நன்னாரிவேர், மயில்துத்தம், இவை வகைக்குத்தோலா ஒன்று பொடிசெய்து அதில் நெய் சின்னப்படி ஒன்று ஜலம் சின்னப்படி நான்கு சேர்த்துக் கிருதபதமாகக் காய்ச்சி மேலுக்குத் தடவிவர புரையோடும் புண்கள் முதலியன தீரும்.

221. காஸீஸாதிகிருதம்:—அன்னபேதி, மஞ்சள், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, தாளகம், மனோசிலை, கம்பில்லம், கந்தகம், வாய்விளங்கம், குக்கில், வெள்ளைமெழுகு, மிளகு, கோஷ்டம், மயில்துத்தம், வெள்ளைக்கடுகு, ரஸாஞ்ஜனம், ஈயசிந்தூரம், சந்தனம், செஞ்சந்தனம், வெள்ளைக் கருங்காலி, வேப்பம் இலை, புங்கம்பட்டை நன்னாரி, வசம்பு, மஞ்சிஷ்டி, அதிமதுரம், சடாமாஞ்சி, வாகைவேர்,

பாச்சோத்திப்பட்டை, பதுமகம், கடுக்காய், தகாவிதை, வகைக் குத்தோலா ஒன்று பொடிசெய்து பசுநெய் சின்னப்படி இரண்டில் போட்டு ஓர் தாமிர பாத்திரத்தில் சேர்த்து கடும்வெய்யிலில் ஏழு நாள் வைத்திருந்த பிறகு மேலுக்கு உபயோகிக்க குஷ்டப்புண்கள் மேகப்படை, கைகால் சொறி, சிரங்குகள், முதலியன தீரும்.

222. மகாதிக்தகம்:—ஏழிலைப்பாலைப்பட்டை, அதிவிடயம், கொன்றைவேர், கடுகுரோகிணி, மலைதாங்கிவேர், கோரைக்கிழங்கு விலாமிச்சவேர், திரிபலை, பர்பாடம், பேய்ப்புடல், வேப்பம்பட்டை மஞ்சிஷ்டி, திப்பிலி, பதுமகம், பூலாங்கிழங்கு, சந்தனம், சிறுகாஞ் சொரி, பேய்க்கொம்மட்டிவேர், மஞ்சள், மரமஞ்சள், சீந்தில், நன் னாரி, மாகாளி, மருள்வேர், ஆடாதோடைவேர், தண்ணீர்விட்டான், மருக்கொன்றை, வெப்பாலையரிசி, அதிமதுரம், நிலவேம்பு, வகைக் குத்தோலா ஒன்று இடித்துப்பொடிசெய்து அதில் பசுநெய் சின்னப் படி இரண்டு, நெல்லிக்காய் ரஸம் சின்னப்படி நான்கு, சுத்தஜலம் சின்னப்படி 16 சேர்த்துக் கிருதபதமாகக் காய்ச்சி வடித்து தினம் காலையில் ஒரு அவுன்சு வீதம் சாப்பிட்டுவர குஷ்டநோய்கள், ரக்த பித்தம், ரக்தமூலம், குன்மம், அக்கி, பெரும்பாடு, கண்டமாலை முத லியன போம்.

223. திரிபலாகிருதம்:—திரிபலை, மஞ்சள், மரமஞ்சள், அமிர் தூகம், நன்னாரி, மாகாளி, ஞாழல், ஓரிலை, மூவிலை, தேவதாரு, ஏலாவாலுகம், தகரபாதுகை, பேய்க்கொம்மட்டிவேர், தந்திவேர், மாதளைத்தோல், சிறுநாகப்பூ, கருநெய்தல் கிழங்கு, ஏலம், மஞ் சிஷ்டி, வாய்விளங்கம், கோஷ்டம், பதுமகம், ஜாதிப்பூ, வெள்ளைச்சந் தனம், தாளிசபத்திரி, கண்டங்கத்திரிவேர், வகைக்குத் தோலா ஒன்று இடித்துப்பொடிசெய்து அதில் பசுநெய் சின்னப்படி இரண் டு, ஜலம் சின்னப்படி எட்டு, சேர்த்துக் கிருதபதமாகக் காய்ச்சி வடி கட்டி தினம் காலையில் ஒரு அவுன்சு வீதம் சாப்பிட்டுவர அபஸ்மா ரம், உன்மாதம், காஸம், வாதரக்தம், விஷங்கள், முதலியன தீரும்.

224. சாங்கேரீ கிருதம்:—திப்பிலி, தேசாவரம், கொடுவேலி யானைத்திப்பிலி, சிறுசெருஞ்சிவேர், சுக்கு, மல்லிவிதை, மலைதாங்கிவேர்

வாசி என்ற நாயர் அவர்கள் மதத்திலும் இவ்விதமே பொருள் செய்
யவேண்டும். எனெனில் "ஹிருதயஸ்ய" "வக்ஷஸ" என்று வசன
மிருப்பதால் வக்ஷஸ் என்பது திரதயவாசியாகிலும் ஹிருதயபத
மிருப்பதால் கோபலீவர்த நியாயத்தால் ஹிருதய வியதிரிக்தமான
வக்ஷஸ் என்று பொருள் கொள்ளவேண்டும். அப்பொழுது வக்ஷ
என்பது திவிதயவாசியாகி விடுகின்றது. இவ்விதம் ஒப்புக்கொ
ள்ளாவிட்டால் ஹிருதயம், வக்ஷஸ், என்ற பதங்கள் ஏகார்த்தங்களாகி
புனருக்தமாகும். இந்த வசனத்தாலேயே வக்ஷஸ் வேறு ஹிருத
யம் வேறு என வியக்தமாக ஏற்படுவதால் பத்திராதிபர் மதம் ஸித்த
மாகிறது. வேத வசனத்தில் காணும் ஹிருதயஸ்ய, வக்ஷஸ, என்ற
பதங்களுக்கு அர்த்த பேதத்தை நாயர் அவர்கள் காட்டாமலேயே
தன் வியாசத்தை முடித்துவிட்டார். இவ்விதம் வழவழப்பாக எழுதி
விடுவதால் நாயர் அவர்கள் மதமே ஸித்திக்க முடியாமல் போய்விடு
கின்றது. முன் சொன்ன இரண்டு பதங்களுக்கும் அர்த்த பேதத்
தைக்காட்ட வேண்டியது அவர் கடமையாக இருக்க இந்த முக்ய
கடமையைச் செய்யத் தவறிவிட்டதுடன் "நக்லோம்ன:?" என்ற
நிஷேத வாக்யத்தையும் அன்வயிக்கத் தவறிவிட்டார்கள். இந்
மீமாம்ஸா நிரூபணத்தைத் தன் மதத்திற்கு ஆதாரமாகக் காட்டி
பத்திராதிபர் வியாசத்தை "அகல்பஜல்பம்" என்ற வகைக்கு இலக்
காகவும் செய்துள்ளார். விஷயத்தை உபபாதிப்பதில் முயற்சியை
விட்டுவிட்டு மனோமூலமாகத் தாக்ஷேபவசனத்தை பண்டித க்ருத்
யமாக நினைத்துவிட்டார். உண்மையில் இந்த இரண்டு பதங்களுக்
கும் அர்த்தபேத முன்னாலேயே அதை வன் இவர் வெளியிடவில்
இவருடைய உபபாதனம் மீமாம்ஸையை இவர் கனவிலும் கண்ட
தல்லவென்பதை அறிவிக்கின்றது. வக்ஷஸ் என்பது திவிதயவா
என்ற பத்திராதிபமதத்தில் மாம்ஸ விசேஷத்வம் போய்விடுகிறதே
என்ற ஆக்ஷேபம் இவருக்குள்ள அக்ஞானத்தைக் காட்டுகின்றது.
அது திவிதயவாசியானதால் அது மாம்ஸ விசேஷமாகாதென்பது
உண்மையே. அதை மாம்ஸவிசேஷமாக்குகிற வாக்யம் "நக்லோம்
ன:" என்பது என்கிற பத்திராதிபருடைய உபபாதனத்தை இவர்
மறந்துவிட்டார். இந்த அக்ஞதை மூலமாக எழுதப்பட்டுள்ள வ
சனங்கள் மிகவும் க்ராம்யமாகும். இந்த உபபாதனத்தை அனல்
ஜல்பமென பரிகஸிக்கப்புகுந்த இவர் தன்னுடைய அனல்பஜல்ப
தை அறியாமல் போய்விட்டார். இதை உத்தேசித்தே வியாஸர்

"த்ருஷ்ட பூர்வ குருதோ மூர்க்க: சாஸ்த்ராணாம் அவிசாரத:|
விருத்தார்த்த ப்ருச்சன் ஸந்தேஹான் அந்த ஸ்வப்ராமிவர்ச்சதி"

எனக்கூறியுள்ளார்.

(1)	(2)	(1)	(2)